தூத்துக்குடி பக்கிள் ஓடை 5 மீட்டர் விரிவாக்கம்

மாநகராட்சி கூட்டத்தில் மேயர் தகவல்

■ தூத்துக்குடி

தூத்துக்குடி பக்கிள் ஓடையை 5 மீட்டர் விரிவாக்கம் செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்.

தூத்துக்குடி மாநகராட்சி சாதாரண கூட்டம், மாமன்ற கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது. மேயர் ஜெகன் பெரியசாமி தலைமை வகித்தார். ஆணையர் பானோத்ம்ருகேந்தர் லால், துணை மேயர் ஜெனிட்டா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசியதாவது: மாநகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி ஏற்கெனவே உயர்த்தப்பட்டுள்ள நிலையில் குடிநீர் கட்டணத்தை உயர்த்தும் முடிவை கைவிட வேண்டும். கால்டுவெல் காலனியில் புதிதாக திறக்கப்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டிடத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. திறக்கப்பட்ட சிலநாட்களிலேயே சேதம் ஏற்பட்டிருப்பது கவலை அளிக்கிறது.

தூத்துக்குடியில் தெருநாய்கள் தொல்லை அதிகமாக உள்ளது. இதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மழையின் போது சேதமடைந்த வடிகால்களை சீரமைக்க வேண்டும். பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்காக சேதப்படுத்தப்பட்ட சாலைகளை விரைவாக சீரமைக்க வேண்டும். அனைத்து பகுதிகளுக்கும் சாலை, தெரு விளக்கு வசதி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

● தூத்துக்குடி மாநகராட்சி கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசினார். உடன் ஆணையர் பானோத் ம்ருகேந்தர் லால், துணை மேயர் ஜெனிட்டா.

படம்: என்.ராஜேஷ்

எப்சிஐ குடோன் முதல் 6 கி.மீ. தொலைவுள்ள பக்கிள் ஓடையை, இருபுறமும் உள்ள சிமெண்ட் சாலைகள் சேதமடையாத வகையில் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேயர் பதில்

தூத்துக்குடியில் 35 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு சில இடங்களில் சிறு, சிறு பிரச்சினைகளை தவிர மாநகராட்சி பகுதி முழுவதும் சீராக குடிநீர் வழங்கப்படுகிறது. அனைத்து பகுதிகளுக்கும் விரைவில் தினசரி குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

15, 16, 17, 18, 49, 50 ஆகிய வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் காரணமாக சாலைகள் சேதமடைந்துள்ளன. இந்த சாலைகள் அனைத்தும் 2 மாதங்களில் சீரமைக்கப்படும். அதுபோல 24 மணி நேர குடிநீர் விநியோக பணிகள் நடப்பதால் 4, 5, 9, 10, 11 ஆகிய வார்டுகளில் சாலைகள் சேதமடைந்துள்ளன. இந்த சாலைகளும் 3 மாதங்களில் சீரமைக்கப்படும். தூத்துக்குடியில் புதிதாக அமைக்கப்படும் 964 சாலைகளில் இவைகளும் சேர்க்கப்படும்.

தெரு நாய்களை பிடித்து பராமரிக்க தனியார் தொண்டு நிறுவனத்துக்கு தருவைகுளம் உரக்கிடங்கு பகுதியில் 5 ஏக்கர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இன்னும் பணிகளை தொடங்கவில்லை. பணிகள் தொடங்கியதும் தெருநாய்கள் பிடிக்கப்பட்டு அங்கு வைத்து பராமரிக்கப்படும்.

தூத்துக்குடி நகரின் பிரதான மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாயான பக்கிள் ஓடையை 5 மீட்டர் விரிவாக்கம் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது. எப்சிஐ குடோன் முதல் 6 கி.மீ. தொலைவுள்ள பக்கிள் ஓடையை, இருபுறமும் உள்ள சிமெண்ட் சாலைகள் சேதமடையாத வகையில் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி சார்பில் மக்களுக்கு தேவையான பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றுக்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாநகராட்சி அதிகாரிகள், மண்டல தலைவர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தூய்மை பணியாளர்களுக்கு

நலத்திட்ட உதவி வழங்க ரூ.40 கோடி கையிருப்பு

நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி தகவல்

■ திருநெல்வேலி/ தூத்துக்குடி

தமிழகத்தில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க நலவாரியத்தில் ரூ.40 கோடி கையிருப்பு உள்ளதாக தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி தெரிவித்தார்.

தாட்கோ சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.ரவிச்சந்திரன் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது. தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கலந்து கொண்டு பேசியதாவது:

தூய்மை பணியாளர்களுக்கு கரோனா காலத்துக்கான நிதியுதவி குறித்த கோரிக்கையை விரைவில் பரிசீலனை செய்து வழங்குவதற்குஏற்பாடுசெய்யப்படும். ஊதியம் குறித்து முதல்வரிடம் கலந்தாலோசனை செய்து,நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாதம் தோறும் தூய்மை பணியாளர்களுக்கான குறைதீர்வு நாள் கூட்டம் நடத்தப்படவேண்டும். தூய்மை பணியாளர் நலவாரியத்தை உருவாக்கிய முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் ஆண்டுதோறும் ஒரு தூய்மை பணியாளரை தேர்ந்தெடுத்து விருது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க உள்ளேன் என்றார்.

● திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்.

படம்: மு.லெட்சுமி அருண்

தொடர்ந்து, தாட்கோ சார்பில் ஒரு பயனாளிக்கு விபத்து காப்பீட்டு தொகையாக ரூ.5 லட்சத்துக்கான காசோலையை அவர் வழங்கினார். நிகழ்ச்சியில் தாட்கோ மாவட்ட மேலாளர் ஜெனிஷிஸ் மஷியா மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தாட்கோ சார்பில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உவிகள்மற்றும் அடையாள அட்டைகளை வழங்கி வெ.ஆறுச்சாமி பேசியதாவது:

தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியத்துக்கு ஆண்டுக்கு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்போது, வாரியத்தின் கையிருப்பாக ரூ.40 கோடி நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக உள்ளது. தூய்மை பணியாளர் நலவாரியத்தில் பதிவுபெற்ற உறுப்பினர்களுக்கு பணியிடத்தில் விபத்து, மரணம், உறுப்புகளை இழத்தால், சரிசெய்ய இயலாத அளவுக்கு இழப்பு ஏற்பட்டால் இழப்புத்தொகை வழங்கப்படும். என்று தெரிவித்தார்.விழாவில் மாவட்ட ஆட்சியர் ஆர். சுகுமார், துணை மேயர் கே.ஆர். ராஜு, தூய்மை பணியா ளர்கள் நலவாரிய துணைத் தலைவர் செ.கனிமொழி பத்மநாபன் பங்கேற்றனர்.

சாத்தான்குளம் கொலையில் காவல் ஆய்வாளர் புதிய மனு

■ மதுரை

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அப்ரூவராக மாற அனுமதி கோரி புதிய மனு தாக்கல் செய்துள்ளார்.

சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ், அவரது மகன் பெனிக்ஸ் கொலை வழக்கு விசாரணை மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் 4 ஆண்டுக்கு மேலாக நடந்து வருகிறது. இந்த வழக்கு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, வழக்கின் முதல் எதிரியான காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், அரசுத் தரப்புச் சாட்சியாக (அப்ரூவர்) மாற விருப்பம் தெரிவித்து மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை ஏற்க சிபிஐ மற்றும் ஜெயராஜ் மனைவி தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சரியான காரணத்துடன் மனுத் தாக்கல் செய்ய ஸ்ரீதருக்கு நீதிபதி உத்தரவிட்டார். அதன்படி நீதிபதி முத்துக்குமரன் முன் 17 பக்க பதில் மனுவை ஸ்ரீதர் தாக்கல் செய்தார். பின்னர் இந்த மனு தொடர்பாக ஆக.4-ல் முடிவெடுப்பதாக கூறி விசாரணையை நீதிபதி தள்ளிவைத்தார்.

● சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணைக்காக மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராக வந்த காவல் ஆய்வாளர் ஸ்ரீதர்.

படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

விளாத்திகுளம், கழுகுமலை, கயத்தாறில் புதிய சார் பதிவாளர் அலுவலக கட்டிடங்கள் திறப்பு

■ கோவில்பட்டி

விளாத்திகுளம், கழுகுமலை, கயத்தாறில் புதிதாக கட்டப்பட்ட சார் பதிவாளர் அலுவலக கட்டிடங்களை நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

விளாத்திகுளம், கழுகுமலை, கயத்தாறில் சார்பதிவாளர் அலுவலகங்கள் பழைய கட்டிடத்தில் இயங்கி வந்தன. இந்த கட்டிடங்கள் மிகவும் மோசமாக இருந்ததால் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து தமிழக அரசு சார்பில் விளாத்திகுளத்தில் ரூ.1.83 கோடியிலும் கழுகுமலையில் ரூ.1.60 கோடியிலும், கயத்தாறில் 1.92 கோடி மதிப்பிலும் புதிதாக சார் பதிவாளர் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டிருந்தன. இந்த அலுவலகங்களின்திறப்புவிழாநேற்று நடந்தது. சென்னையில் இருந்து காணொலி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து விளாத்திகுளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் நடந்த விழாவில் சட்டப்பேரவை உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் குத்துவிளக்கேற்றினார். இதில், மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அசோகன், விளாத்திகுளம் சார் பதிவாளர் ஆதிலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

● விளாத்திகுளத்தில் திறக்கப்பட்ட புதிய சார்பதிவாளர் அலுவலகத்தில் ஜீ.வி.மார்க்கண்டேயன் எம்எல்ஏ குத்துவிளக்கேற்றினார்.

இதுபோல் கழுகுமலையில் நடந்த விழாவில் பேரூராட்சி தலைவர் அருணா சுப்பிரமணியன் குத்துவிளக்கேற்றினார். பேரூராட்சி துணைத் தலைவர் சுப்பிரமணியன், சார் பதிவாளர் செல்லப்பாண்டி கலந்து கொண்டனர்.

கயத்தாறில் நடந்த விழாவில் பேரூராட்சி தலைவர் சுப்புலட்சுமி ராஜதுரை குத்துவிளக்கேற்றினார். பாளையங்கோட்டை மாவட்ட பதிவாளர் (தணிக்கை) செல்வகுமாரி, கயத்தாறு சார் பதிவாளர் சாந்தகுமாரி, வட்டாட்சியர் சுந்தரராகவன் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி முத்துநகர் கடற்கரையில் தூய்மை பணி

■ தூத்துக்குடி

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு 'தூய்மைபாரதம்' திட்டத்துக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

வீடுகள், சாலைகளில் மட்டுமின்றி, நாம் செல்லும் இடங்கள் அனைத்தும் தூய்மையாக இருக்க வேண்டும் என்ற வகையில் தூய்மை பாரத திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடியில் கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணி நேற்று நடைபெற்றது. தூத்துக்குடி முத்துநகர் கடற்கரை தினசரி நூற்றுக்கணக்கான பொதுமக்கள்வந்துசெல்லும் பகுதியாக உள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள பூங்காக்களுக்கு வரும் பொது மக்கள், சிறுவர், சிறுமிகள் தங்கள் பயன்படுத்திய பொருட்களின் கழிவுகளை அங்கேயே விட்டு செல்கின்றனர்.

இதனால் பிளாஸ்டிக் கழிவுகள் தேக்கமடைகின்றன. கடலிலிருந்து அடித்து வரப்படும் பிரிந்து போன வலை உள்ளிட்ட பொருட்களும் கடற்கரையில் ஒதுங்குகின்றன.

இவற்றையெல்லாம் தூய்மைப்படுத்தி தூத்துக்குடி நகரை அழகு நகரமாக மாற்றுவதற்காக ஜேசிஐ குயின் பீஸ் என்ற பெண்கள் அமைப்பினர், தூத்துக்குடி வ.உ.சிதம்பரம் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களோடு இணைந்து தூய்மைப்படுத்தும் பணியைமேற்கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக கடற்கரையில் தூய்மை பணி மேற்கொண்டு அங்கு கிடந்த குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகள் சேதம் அடைந்த வலைகள் போன்றவற்றை அகற்றினர்.

இதில், தன்னார்வலர்கள், மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

● தூத்துக்குடி முத்துநகர் கடற்கரையில் தூய்மை பணியில் ஈடுபட்ட தன்னார்வலர்கள் மற்றும் மாணவர்கள்.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: சர்வே எண்.86, ப்ளாக் எண்.14, தெற்கு மாசி தெரு, திருநெல்வேலி மெயின் ரோடு, அஞ்சல் அலுவலகம் எதிரில், தென்காசி, தமிழ்நாடு-627811

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1657210170000002 1.Mr.சங்கரசுப்ரமணியன் 2.Mr.மோகனா சரவணன் 3.Mrs.கனகசெல்வம்	(i) 09.10.2023 (ii) 05.10.2023 அன்றுள்ளபடி ₹ 4,00,910/- (ரூபாய் நான்கு லட்சத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 12.09.2023 & நேரடி சுவாதீனம் - 04.01.2025	30.04.2025 அன்றுள்ளபடி ₹ 6,26,202.21 (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தாறாயிரத்து இருநூற்று இரண்டு மற்றும் பைசா இருபத்தொன்று மட்டும்)	₹ 4,68,000/- (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் மட்டும்)	₹ 46,800/- (ரூபாய் நாற்பத்து ஆறாயிரத்து எண்ணூறு மட்டும்)

சொத்து விவரம்: தென்காசி பதிவு மாவட்டம், புலியங்குடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட டவுண் சர்வே படி நத்தம் சர்வே எண்.309/2A1A, வார்டு E, ப்ளாக் 21, T.S.எண்.205, வார்டு எண்.16, கதவு எண்.39A, அஞ்சான் தெரு, புலியங்குடி நகராட்சி, அதே கிராமம், திருநெல்வேலி மாவட்டம் என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக 9.9 அடி, வடக்கு தெற்காக 22 அடி மொத்தம் 217.8 சதுர அடி, 20.234 சதுர மீட்டர் நிலம், அதிலுள்ள கட்டடம், அதனுடன் அனைத்து இதர அனுபந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்கு தெரு, கிழக்கு: காளியப்பன் வீட்டு பொது சுவர், தெற்கு: மாடசாமி வீட்டு பொது சுவர், மேற்கு: ராமையா சொத்து.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 12.09.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 11.09.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 10.09.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.பரதன் - 93622 76767 / Mr.கிருபாகர் – 94455 08743

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:-support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 01.08.2025, இடம்: பெங்களூரு
ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

HDFC BANK We understand your world
HDFC Bank Limited
கிளை அலுவலகம்: ஸ்ரீ நித்யகல்யாணி டவர்ஸ், எண்.34, கிருஷ்ணராயர் டேங்க் தெரு, 3வது தளம், வடக்கு வேலி தெரு, மதுரை-625001

இ-ஏல விற்பனை அறிவிப்பு — அசையா சொத்து விற்பனைக்கான இ-ஏல பொது அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதிசொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

HDFC பேங்க் லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோர்களிடமிருந்து, HDFC பேங்க் லிமிடெட் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு HDFC வங்கிக்குச் சேரவேண்டிய கடன் பாக்கிக்தொகையான 27.07.2025 அன்றுள்ளபடி ₹ 14,08,272.50 அதன் மீதான வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவை சேர்த்து வசூலிக்க இ-ஏலம் மூலம் அசையா சொத்துகளை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", உள்ளதெல்லாம் உள்ளவாறு, பின் தொடர்ச்சியாக வங்கியின் உதவியை நாடமுடியாது எனும் அடிப்படையில் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர் விற்பதற்கு உத்தேசித்துள்ளார். சொத்து விவரங்கள், ரிசர்வ் விலை & ஏல உயர்வு தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்: 1.Mrs.மெர்லைன் ராபின்ஸ்டன் ராஜ், W/o.ராபின்ஸ்டன் ராஜ், 2.Mr.ராபின்ஸ்டன் ராஜ் ராஜாமணி, S/o.ராஜா மணி, 3.Mr.ஜேம்ஸ் ஜெபாலன், S/o.ராஜன்

அடமான சொத்து விபரம்

ஐட்டம் எண்.1: பாளையம் கோட்டை பதிவு மாவட்டம், கொம்படிக்கோட்டை சார்-பதிவகம் எல்லைக்குட்பட்ட, புதிய சர்வே 1015/22, கதவு எண்.18/63, பகுதி-I, அரசூர் கிராமம், சாத்தாள்குளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம் என்னும் முகவரியில் 10.500 சென்ட் நிலம் அதிலுள்ள கட்டடம், அதனுடன் அனைத்து கட்டுமானங்கள் மேம்பாடுகள் மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது நிகழ்காலத்திலும் மற்றும் எதிர்காலத்திலும் பூமியுடன் இணைக்கப்பட்ட எதனுடனும் நிரந்தமாக இணைக்கப்பட்டுள்ளவைகள் மற்றும் அனைத்து அனுபந்தங்கள் / மாமூல் உரிமைகள். எல்லைகள்: கிழக்கு: தெரு மற்றும் சிலுவையம்மாள்-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: ரெத்தினராஜ்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: ஜெயராஜ், ஞானராஜ் & சர்ச் ஆகியோருக்கு சொந்தமான சொத்து, வடக்கு: சர்ச் மற்றும் ராபின்ஸ்டன் ஆகியோருக்கு சொந்தமான சொத்து.

வங்கிக்கு தெரிந்தவரை சொத்தின் வில்லங்கங்கள் : மேற்குறிப்பிட்டுள்ள அடமான சொத்தின் முதல் உரிமை வங்கியிடம் உள்ளது

ரிசர்வ் விலை ₹ 25,76,000/- | டேவணித்தொகை (EMD) ₹ 2,57,600/- | ஏல உயர்வுத்தொகை ₹ 30,000/-

ஏல தேதி & நேரம்: 20.08.2025 - காலை 11.30 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை (விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்)

EMD மற்றும் இதர ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் : 19.08.2025 மாலை 3.00 மணிக்குள் | சொத்தினை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம்

EMD Remittance : NEFT/ RTGS in the following Account: 50200006492171, Name of the Account: ONLINE AUCTION ACCOUNT-RPM LEGAL Name of the Beneficiary: HDFC BANK LTD., IFSC Code: HDFC0000240

இ-ஏல விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு சேவை வழங்குனர்:
M/s e-Procurement Technologies Limited (Auction Tiger), அகமதாபாத் [Contact Nos. : 079-6813 6842/68136837, Mob: +91-92655 62821 / 18; தொடர்புக்கு Mr. ராம்பிரசாத் சர்மா, Contact No. 80000 23297,
E-mail: ramprasad@auctiontiger.net & support@auctiontiger.net
சொத்து பற்றிய விவரங்களுக்கு:
Mr.மணிகண்டன் B (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி), Mob No: 83006 61886, E-mail ID: manikandan.b1@hdfcbank.com
Web Portal Address: https://hdfcbank.auctiontiger.net

"https://hdfcbank.auctiontiger.net" இணையதளத்திலும் மற்றும் விலைக்குறிப்பீடு படிவத்திலும் காணும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி இ-ஏல விற்பனை நடைபெறும்.

SARFAESI சட்டம், 2002-ன் கீழ் 15 நாட்கள் அறிவிப்பு:
கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) / 9(1) உடன் கீழ் இந்த வெளியீடானது மேற்காணும் கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கான 15 நாள் அறிவிப்பு. மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன் பாக்கியை ஏலத்தேதி முன்னர் செலுத்தத்தவறினால் அந்த சொத்துக்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

தேதி: 29.07.2025, இடம்: மதுரை
அதிகாரபூர்வ அலுவலர், HDFC Bank Limited
Regd Office: HDFC BANK HOUSE, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai - 400013

केनरा बैंक Canara Bank
सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை – 625001

விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு)

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002, மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் குறிப்பாக கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரரான M/s. மாதா மெடிக்கல் ஏஜென்சீஸ், உரிமையாளர்: திருமதி. பியூலஜா கரோலின்.J, ஜாமீன்தாரர்: திரு. மத்தியாஸ் சூசைமரியான், என்பவர் மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை 30.07.2025 தேதிப்படி